**19TAU19**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION MAY 2022**
(Sixth Semester)

Branch – **TAMIL**

**SANGA ILLAKKIYAM**

Time: Three Hours | Maximum: 75 Marks

**பகுதி – அ** **(10×1=10)**

**சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. நெய்தல் நிலத் தலைவன் யார்?
   அ. வெற்பன் ஆ. ஆயன்
   இ. சேர்ப்பன் ஈ. ஊரன்

2. "ஏனல் காவலர் கவண்ஒலி வெரீஇ"- ஏனல் பொருள் தருக.
   அ. தினை ஆ. திணை
   இ. வலிமை ஈ. குறிஞ்சி

3. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?
   அ. நல்லூர் நத்தத்தனார் ஆ. நன்முல்லையார்
   இ. நல்லியக்கோடன் ஈ. கோப்பெருஞ்சோழன்

4. பறம்பு மலையை ஆட்சி செய்த குறுநிலமன்னன் யார்?
   அ. அதிகன் ஆ. ஆய்
   இ. பாரி ஈ. பேகன்

5. நெருப்புப் போன்று மலர்ந்த மலர்களை உடையது எது?
   அ. முருக்கமரம் ஆ. முருங்கமரம்
   இ.மாமரம் ஈ. கொன்றைமரம்

6. 'தண்செய் எழிலி' – எது?
   அ. ஆகாயம் ஆ. மேகம்
   இ. காற்று ஈ. குளிர்நீர்

7. முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ள பாடல் அடிகள் எத்தனை?
   அ. 101 ஆ. 102
   இ. 103 ஈ.104

8. தெய்வத்தை வணங்க நற்சொல் கேட்கும் துறை யாது?
   அ. பூக்கொள்நிலை ஆ.வாள்நிலை
   இ.விரிச்சி ஈ. கொற்றவைநிலை

9. முரசு கட்டிலில் துயின்றவர் யார்?
   அ. மோசி கீரனார் ஆ. பிசிராந்தையார்
   இ. நக்கண்ணையார் ஈ. பொன்முடியார்

10. 'புரைதபு வள்ளியோர்ப் படர்குவர் புலவர்'-யாரிடம்?
    அ. அரசன் ஆ. கொடைவள்ளல்
    இ. கடவுள் ஈ. உறவினர்

**பகுதி – ஆ** **(5×5=25)**

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

11. அ. குறுந்தொகை காட்டும் நெய்தல் திணைப் பாடற்கருத்துக்களை எடுத்தியம்புக.

(அல்லது)

ஆ. கார்காலத்துத் திரும்புவேன் என்ற தலைவனின் கூற்றும் தலைவியின் நிலையும் குறித்து குறுந்தொகை கூறும் கருத்துக்களைத் தருக.

**Cont...**

12. அ. நல்லியக்கோடனின் சிறப்பியல்புகளை சிறுபாணாற்றுப்படை வழி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. வஞ்சி, மதுரை மாநகர்ச் சிறப்புக்கள் குறித்து சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுவதைப் புலப்படுத்துக.

13. அ. வரைவுகடாதலை அறிந்த தோழி தலைவிக்குக் கூறும் குறிஞ்சித்திணைக் கருத்துக்களை அகநானூற்றின் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. அகநானூற்றில் இடம்பெறும் நெய்தல் நில வருணனைகளைப் புலப்படுத்துக.

14. அ. முல்லைப்பாட்டில் இடம்பெறும் பாசறையின் இயல்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. முல்லைப்பாட்டு காட்டும் முல்லைநில வருணனைகளைப் புலப்படுத்துக.

15. அ. பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பியிடம் வரி வாங்குவது பற்றி அறிவுறுத்தும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. நக்கண்ணையார் பாடல்கள் வழி அறியப்படும் கைக்கிளைச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

பகுதி - இ (5×8=40)

**கட்டுரை வடிவில் விடையளி.**

16. அ. அகவாழ்வின் சிறப்பு குறுந்தொகைப் பாடல்கள் வழி வெளிப்படும் திறத்தை ஆராய்க.

(அல்லது)

ஆ. ஐந்திணை குறித்தும் அவை குறுந்தொகைப் பாடல்களில் இடம்பெறும் பாங்கும் குறித்தும் ஆய்க.

17. அ. ஆற்றுப்படை நூல்களில் சிறுபாணாற்றுப்படையின் இடம் குறித்து ஆய்க.

(அல்லது)

ஆ. நல்லியக் கோடனின் கொடை, வீரம், புகழ் முதலியன குறித்துக் கட்டுரைக்க.

18. அ. முல்லைநில இயல்பையும் வினைமுடிந்து மீளும் தலைவன் தேர்ப்பாகனிடம் உரைத்த செய்திகளையும் அகநானூறு கொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ. அறத்தொடு நிற்றல் பற்றியும் அகநானூற்றில் நும்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அறத்தொடு நிற்றல் கருத்துக்களையும் எடுத்துரைக்க.

19. அ. முல்லைப்பாட்டு கொண்டு முல்லைத்திணையின் முதல், கரு, உரிப்பொருட்களை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ. முல்லைப்பாட்டு காட்டும் பாசறைநிலை குறித்து விவரி.

20. அ. புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்தும் புரவலர் - புலவர் வாழ்வினை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ. புறநானூற்றில் பொன்முடியார் பாடல்கள் வழி அறியலாகும் சமூக ஒழுகலாறுகள் பற்றி விளக்குக.

Z-Z-Z END